ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ பொறுத்தேன் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ பொறுத்தேன் ॥

திருவிண்ணகர் - 2

‡பொறுத்தேன் புன்சொல் நெஞ்சில்⋆ பொருள் இன்பம் என இரண்டும்
இறுத்தேன்⋆ ஐம்புலன்கட்கிடன் ஆயின⋆ வாயில் ஒட்டி
அறுத்தேன்⋆ ஆர்வச் செற்றம் அவை தம்மை⋆ மனத்தகற்றி
வெறுத்தேன்⋆ நின்னடைந்தேன்⋆ திருவிண்ணகர் மேயவனே (1)

மறந்தேன் உன்னை முன்னம்⋆ மறந்த மதியில் மனத்தால்⋆
இறந்தேன் எத்தனையும்⋆ அதனால் இடும்பைக் குழியில்⋆
பிறந்தே எய்த்தொழிந்தேன்⋆ பெருமான்! திரு மார்பா!⋆
சிறந்தேன் நின்னடிக்கே⋆ திருவிண்ணகர் மேயவனே (2)

மானேய் நோக்கியர் தம்⋆ வயிற்றுக் குழியில் உழைக்கும்⋆
ஊனேய் ஆக்கை தன்னை⋆ உதவாமை உணர்ந்துணர்ந்து⋆
வானே! மா நிலமே!⋆ வந்துவந்தென் மனத்திருந்த
தேனே⋆ நின்னடைந்தேன்⋆ திருவிண்ணகர் மேயவனே (3)

பிறிந்தேன் பெற்ற மக்கள்⋆ பெண்டிர் என்றிவர் பின்னுதவா-
தறிந்தேன்⋆ நீ பணித்த அருளென்னும்⋆ ஒள் வாள் உருவி
எறிந்தேன்⋆ ஐம்புலன்கள் இடர் தீர⋆ எறிந்துவந்து
செறிந்தேன்⋆ நின்னடிக்கே⋆ திருவிண்ணகர் மேயவனே (4)

பாண் தேன் வண்டறையும் குழலார்கள்⋆ பல்லாண்டிசைப்ப⋆
ஆண்டார் வையம் எல்லாம்⋆ அரசாகி⋆ முன்னாண்டவரே
மாண்டார் என்று வந்தார்⋆ அந்தோ! மனைவாழ்க்கை தன்னை
வேண்டேன்⋆ நின்னடைந்தேன்⋆ திருவிண்ணகர் மேயவனே (5)

கல்லா ஐம்புலன்கள் அவை⋆ கண்டவாறு செய்யகில்லேன்⋆
மல்லா! மல்லமருள் மல்லர் மாள⋆ மல்லடர்த்த
மல்லா!⋆ மல்லலம் சீர்⋆ மதிள் நீர் இலங்கையழித்த
வில்லா⋆ நின்னடைந்தேன்⋆ திருவிண்ணகர் மேயவனே (6)

www.prapatti.com

வேறா யான் இரந்தேன்⋆ வெகுளாது மனக்கொள் எந்தாய்!⋆
ஆறா வெந்நரகத்து⋆ அடியேனை இடக் கருதி⋆
கூறா ஐவர் வந்து⋆ குமைக்கக் குடிவிட்டவரைத்⋆
தேறாதுன் அடைந்தேன்⋆ திருவிண்ணகர் மேயவனே (7)

தீ வாய் வல்வினையார்⋆ உடன் நின்று சிறந்தவர் போல்⋆
மேவா வெந்நரகத்து⋆ இட உற்று விரைந்து வந்தார்⋆
மூவா வானவர் தம் முதல்வா!⋆ மதி கோள் விடுத்த
தேவா⋆ நின்னடைந்தேன்⋆ திருவிண்ணகர் மேயவனே (8)

போதார் தாமரையாள்⋆ புலவிக் குல வானவர் தம்
கோதா⋆ கோதில் செங்கோல்⋆ குடை மன்னர் இடை நடந்த
தூதா⋆ தூ மொழியாய்! சுடர் போல்⋆ என் மனத்திருந்த
வேதா⋆ நின்னடைந்தேன்⋆ திருவிண்ணகர் மேயவனே (9)

‡தேனார் பூம் புறவில்⋆ திருவிண்ணகர் மேயவனை⋆
வானாரும் மதில் சூழ்⋆ வயல் மங்கையர் கோன் மருவார்⋆
ஊனார்வேற் கலியன்⋆ ஒலிசெய் தமிழ் மாலை வல்லார்⋆
கோனாய் வானவர் தம்⋆ கொடி மா நகர் கூடுவரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com